ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2346 - 2023 අගෝස්තු මස 18 වැනි සිකුරාදා - 2023.08.18

*2346 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1544 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1554 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, ஓகத்து மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1541-B 82484-5,441 (2023/8)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

## பதவிகள் - வெற்றிடம்

### பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி – (சிங்களம்)
அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் / தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, புரட்டாசி மாதம் 18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, ஆடி மாதம் 20.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாறை | அம்பாறை | அம்பாறை நகர் பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி (சிங்கள மொழிமூலம்) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், அம்பாறை. |

09-565

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழிமூலம் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழ் மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**– க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

5. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக் கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி. மீ. வரையிலான தூரத்தில் பிரிவில் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்ட செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

7. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, புரட்டாதி மாதம் 18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
கொஸ்வத்தை,
பத்தரமுல்லை,
2023, ஆவணி 24.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாறை | கல்முனை (முஸ்லிம்) | மருதமுனை பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி (தமிழ் மொழிமூலம்) | மாவட்ட செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், அம்பாறை. |

08-566

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

சிங்கள மொழிமூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் /மேலதிக விவாகம் (கண்டிய/பொது)
பதிவாளர் பதவி – கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தானவராகவும் பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்ட செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யு. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, யூலை 31.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | குண்டசாலை | பாததும்பர உடகம்பஹ மேற்கு பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி மற்றும் பாததும்பர பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |
| கண்டி | ஹாரிஸ்பத்துவ | மெதஸியபத்துவ 01 பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி மற்றும் ஹாரிஸ்பத்துவ பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |
| கண்டி | அக்குரணை | ஹாரிஸ்பத்துவ உடகம்பஹ இலக்கம் 02 பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி மற்றும் ஹாரிஸ்பத்துவ பிரிவின் விவாக (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| கண்டி | அக்குரணை | ஹாரிஸ்பத்துவ பிரிவின் மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |
| கண்டி | உடுதும்பறை | உடுதும்பர (துலகுனே) பிரிவின் மேலதிக விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |
| கண்டி | உடுதும்பறை | உடுதும்பர கங்தெக பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி மற்றும் உடுதும்பர விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |
| கண்டி | பூஜாபிட்டிய | பல்லேகம்பஹ தெற்கு 02 பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி மற்றும் ஹாரிஸ்பத்துவ பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |

*08-862*

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி – (சிங்களம்)
கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடத்துக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் / தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்ட செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, ஓகத்து 02.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | தெல்தொட்ட | பாதஹேவாஹட பிரிவின் ஹேவாவிஸ்ஸ கோரளை தெல்தொட பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |
| கண்டி | தெல்தொட்ட | பாதஹேவாஹட பிரிவின் ஹேவாவிஸ்ஸ கோரளை முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |
| கண்டி | தெல்தொட்ட | தெல்தொட்ட பிரிவின் முஸ்லிம் மேலதிக விவாகப் பதிவாளர் பதவி. | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |
| கண்டி | குண்டசாலை | குண்டசாலை கும்புக்கந்துர பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |
| கண்டி | கண்டிப்பட்டினம் | கண்டிப்பட்டினம் சியம்பலாகஸ்தென்ன பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | கண்டிப்பட்டினம் | கண்டிப்பட்டினம் தென்னேகும்புர பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |
| கண்டி | தொளுவ | தொளுவ ஆண்டியாகடவத்த பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |

09-863

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி – (தமிழ்)
கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடத்துக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் / தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்ட செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, ஓகத்து 02.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | உடுநுவர | உடுநுவர பிரிவின் ஹந்தெஸ்ஸ பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. (தமிழ் மொழி மூலம்) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |
| கண்டி | அக்குரணை | அக்குரணை பிரிவின் பன்கொல்லாமட பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. (தமிழ் மொழி மூலம்) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |
| கண்டி | உடுதும்பறை | உடுதும்பறை பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. (தமிழ் மொழி மூலம்) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |

09-864

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

சிங்கள மொழி பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது வருடங்கள் 30 இற்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

5. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களை சேர்த்துக் கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி. மீ. வரையிலான தூரத்தில் பிரிவில் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்ட செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

7. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, ஓகத்து 02.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | கண்டிப்பட்டினம் | கடுகஸ்தொட்ட பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி. | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி. |

09-865

(இணைப்பு 01)

## நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்களுக்கான பணிமுப்பு மற்றும் திறமையின் அடிப்படையில் விசேட தரத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இலக்கம் 1069/19 மற்றும் 1999.03.05 ஆந் திகதிய மற்றும் 2017.04.07 ஆந் திகதிக்கான 2013/31 ஆம் இலக்கமுடைய நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளர் சேவை தொடர்பான சேவைக் குறிப்பின் பிரகாரம் நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியல் உதவியாளர் சேவையின் விசேட தரத்தில் தற்போது வெற்றிடம் காணப்படுகின்ற 65 வெற்றிடங்களை நிரப்புவதற்காக பணிமுப்பு மற்றும் திறமையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு கீழ்க்காணப்படும் தகைமைகள் உள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் தரம் I உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **தேவையான தகைமைகள் :**

I. சேவைத் தொகுதியின் 1 ஆவது வகுப்பில் ஆறு (06) வருடங்கள் திருப்திகரமான சேவையை நிறைவு செய்திருத்தல்.

II. பதவி உயர்வுக்கான காலப்பகுதிக்கு உடன் முன்னதான ஐந்து (05) வருடங்களில் எச்சரிக்கையைத் தவிர வேறு எந்த ஒழுக்காற்றல் தண்டனைகளுக்கும் உட்படாதிருத்தல்.

III. பதவி உயர்வுக்கான காலப்பகுதிக்கு உடன் முன்னதான ஐந்து (05) வருடங்களில் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருக்க வேண்டும்.

IV. அங்கீகரிக்கப்பட்ட செயற்திறன் மதிப்பீட்டு நடைமுறையின்படி பதவி உயர்வு திகதிக்கு உடன் முன்னதான ஆறு (06) வருடங்களுக்குள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேலான செயற்திறனைக் கொண்டிருத்தல்.

V. சிரேஷ்ட தொழில்நுட்பப் பரீட்சையில் பூரணமாக சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

02. **விஷேட விடயங்கள் :** மேற்கூறப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் பொறியியல் உதவியாளர் சேவையின் விஷேட தரத்திற்கு பதவி உயர்த்துவதற்காக பரிசீலனை செய்த பின்னர் மீதமுள்ள வெற்றிடங்களுக்கு I மற்றும் V இல் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்குப் பதிலாக 10.3.1.1 பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள சிரேஷ்ட தொழில்நுட்பப் பரீட்சையில் முதல் அரைவாசியில் I மற்றும் II ஆம் தொகுதிகள் மற்றும் இரண்டாம் அரைவாசியில் II ஆம் தொகுதியில் (அ) மற்றும் (ஆ) பிரிவுகளிலுள்ள பாடங்களில் சித்தியடைதல் போன்றவற்றை பூர்த்தி செய்துள்ள (அதாவது மூன்றாவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்த) உத்தியோகத்தர்கள் விஷேட தர பொறியியல் உதவியாளர் சேவைக்கு பதவி உயர்வு செய்வது சம்பந்தமாக பரிசீலிக்கப்படும்.

2009.05.01 முதல் 2019.02.11 வரை நிலவிய அனைத்து பதவி வெற்றிடங்களும் இந்த நேர்முகப் பரீட்சையின் மூலம் நிரப்புவதற்கும் மற்றும் இச்சந்தர்ப்பத்தில் பதவி உயர்வு பெறும் உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதால் 2019.02.11 க்கு முன்னர் மீண்டும் ஏற்படும் பதவி வெற்றிடங்களும் இந்த நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

03. **ஆட்சேர்க்கும் முறை :** மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவி உயர்வு திகதிக்கு அதாவது இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்கள் ஏற்பட்ட திகதிக்கு திறமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அங்கு பணிமுப்பு மற்றும் திறமை அடிப்படையில் பெற்ற புள்ளிகளின் ஒழுங்கு வரிசைக்கிணங்க பதவி வெற்றிடங்கள் ஏற்பட்ட திகதியிலிருந்து விஷேட தரத்திற்கு பதவி உயர்வு வழங்கப்படும்.

மேலும் ஒவ்வொரு பதவி வெற்றிடங்கள் ஏற்பட்ட திகதிகளில் தகைமையைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் யாரும் இல்லை என கண்காணிக்கப்படும் பட்சத்தில் அந்த பதவி வெற்றிடம் அடுத்த பதவி வெற்றிட திகதிக்கு மாற்றப்படும்.

04. **சேவை நிபந்தனைகள் :** முதலாவது நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளர் சேவையின் சேவைக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் அதில் உள்ளவாறு செல்லுபடியாகும்.

05. **விண்ணப்பிக்கும் முறை :** அதற்கிணங்க, மேலே முதலாவது பந்தியில் (பந்தி 2 இற்கு கவனம் செலுத்தப்பட்டு) குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பதவி உயர்வு திகதியில் பூர்த்தி செய்துள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் I ஆம் தரத்திலுள்ள அனைத்து பொறியியல் உதவியாளர்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, அண்மித்த மேற்பார்வை (Immediate Supervisor) உத்தியோகத்தரின் பரிந்துரைகளுடன், அந்தந்த பிராந்தியங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பணிப்பாளர் ஊடாக (தற்போது ஓய்வு பெற்றுள்ள உத்தியோகத்தர்கள், தாங்கள் கடைசியாகப் பணியாற்றிய அலுவலகத்தின் அண்மித்த மேற்பார்வை (Immediate Supervisor) அதிகாரியின் பரிந்துரைகளுடன், அந்தந்த பிராந்திய பணிப்பாளர் ஊடாக) 2023, செத்தெம்பர் 15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

இது தொடர்பான அனைத்து தகவல்களையும் நீர்ப்பாசன திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் www.irrigation.gov.lk எனும் இணைப்பின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
இல. 230, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 07.

08-960

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகம்

*இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகத்தில் நிலவும் சேவைசார் உத்தியோகத்தர் தரம் - III இன் ஆக்கவுரிமை பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2023*

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தில் நிலவும் சேவைசார் உத்தியோகத்தர் தரம் - III இன் ஆக்கவுரிமை பரிசோதகர் பதவிக்கான 10 வெற்றிடங்களுக்கு பரீட்சைகள் ஆணையாளரால் நடாத்தப்படவுள்ள போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்வதற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் கீழ்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

01. **தகைமைகள்**.- இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தில் குறைந்தபட்சம் 05 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள கீழ்க் குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,

அத்துடன்,

ஏனைய அரச அலுவலகத்தில் கடமை புரியும் 45 வயதுக்குட்பட்ட கீழ்வரும் தகைமைகளைக் கொண்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,

I. MN 04 சம்பளக் குறியீட்டில் செயல் திறன்மிக்கதும் திருப்திகரமானதுமான 05 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

II. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 01/ 2020 இற்கு இணங்க எதுவித ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் உட்பட்டிருக்கக் கூடாது.

III. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விஞ்ஞானமானி (பௌதீகவியல் அல்லது உயிரியல்) பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

02. **பரீட்சைக்கான நிபந்தனைகள்**.- இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் சேவைசார் உத்தி யோகத்தரின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு தொடர்பான நடைமுறைகளுக்கு அமைவாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் - 2023, நவெம்பர் மாதம் கொழும்பில் மாத்திரம் இப்பரீட்சை நடைபெறும், இப்பரீட்சையை ஒத்திவைப்பதற்கும் அல்லது இரத்து செய்வதற்குமான அதிகாரம் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உள்ளது. இந்த அறிவித்தலில் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவனம்சார் பரீட்சைகள்) கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். கோரப்பட்ட தகவல்களை தமது தெளிவான கையெழுத்தில் உள்ளடக்குதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் சேவைசார் உத்தியோகத்தர் தரம் - III இன் ஆக்கவுரிமை பரிசோதகரை ஆட்சேர்ப்பு செய்யும் போட்டிப் பரீட்சை - 2023" என தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

விண்ணப்பங்களை கையேற்கும் இறுதித் திகதி : 2023.09.18 ஆந் திகதி ஆகும்.

**குறிப்பு** : விண்ணப்பப்படிவமோ அல்லது அது தொடர்பான கடிதமோ தபாலில் காணாமல் போதல் அல்லது காலதாமதமடைதல் என்பன தொடர்பில் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் குறித்து கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை காலதாமதம் செய்வதன் மூலம் ஏற்படும் இழப்புக்களை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

03. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவை நியமனங்களை ஒழுங்குபடுத்தும் பொதுவான நிபந்தனைகள். கீழே குறிப்பிடப்படும் நிபந்தனைகள், 2310/29 ஆம் இலக்க 2022.12.14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் சேவைசார் உத்தியோகத்தருக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு தொடர்பான நடைமுறைகளுக்கு இணங்க தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் புலமைச் சொத்து அலுவலகத்தின் சேவைசார் உத்தியோகத்தர்கள் தரம் - III இன் ஆக்கவுரிமை பரிசோதகர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

(i) நியமிக்கப்படும் அலுவலர் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடியவராக இருக்க வேண்டும்;

(ii) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியதுமாகும். உங்களுக்கு உரித்தாகும் ஓய்வூதிய முறை தொடர்பில் எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் எடுக்கப்படவுள்ள கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். விதவைகள்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது விதிக்கப்படும் வகையில் பங்களிப்பு தொகை செலுத்துதல் வேண்டும்.

(iii) அரசாங்க சேவையில் நியமனத்தினை உறுதிப்படுத்திய அலுவலர்களுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 05/2018 ஆம் இலக்க, 2018.09.11 ஆந் திகதிய சுற்றறிக்கை பிரயோகிக்கப்படும். ஆக்கவுரிமை பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று (03) வருட காலப்பகுதிக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

(iv) பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னர் ஐந்து (05) ஆண்டுகளுக்குள் 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரமும் அதற்கு பின்னரான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகளின் பிரகாரமும் சேவைக்கு இணைக்கப்பட்ட அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழியில் தேர்ச்சியினை பெற்றுக்கொள்தல் வேண்டும்.

(v) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு ஒழுங்குவிதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்க நிதிப் பிரமாணங்கள் மற்றும் அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற விதிகள் மற்றும் பிரமாணங்கள் அத்துடன் அமைச்சு மற்றும் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கும் இப்பதவி கடப்பாடுடையதாகும்.

(vi) இந்த வர்த்தமானி அறிவித்தலின் முதலாம் பகுதியினுடைய இரண்டாம் அத்தியாயத்தின் (II அ) ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆட்சேர்ப்பு தொடர்பான பொதுவான நிப்நதனைகளின்பால் விண்ணப்பதாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

04. **சம்பள அளவுத்திட்டம்**.- 2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு இணங்க MN4-2016 குறியீட்டு இலக்கத்தின் பிரகாரம் ரூபா 31,490.00 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 5 x 750- ரூபா 54,250.00 (மாதாந்த) சம்பளம் இப்பதவிக்குரியதாகும்.

05. **வயதெல்லை**.- திறந்த பிரிவினருக்கு ஒர முறை மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், இலங்கை புலமைச் சொத்து அலுவலகத்தில் 05 வருடங்களுக்கு குறையாத வினைத்திறன்மிக்கதும் திருப்திகரமானதுமான சேவையைக் கொண்டிருக்கும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு வயதெல்லை கிடையாது என்பதுடன், வேறு அரசாங்க சேவையின் MN-04 சம்பளக் குறியீட்டில் செயல்திறன்மிக்கதும் திருப்திகரமானதுமான 05 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்த அபிவிருத்தி உத்தியோகத்தர் 2023.09.18 ஆந் திகதியன்று 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

06. **உடல் ரீதியான தகைமைகள்**.-

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு தேவையான உடல் ரீதியான தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ii) பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்ற போதியளவு உடல் மற்றும் உள ரீதியான தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**பிற தகைமைகள்**.-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) 2310/29 ஆம் இலக்க 2022.12.14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகளின் அத்தியாயம் 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையீனங்களில் எதனையும் கொண்டிருக்கக் கூடாது.

(iv) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற கடைசித் திகதிக்கு முன்னர் இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகள் மற்றும் வயதெல்லை என்பவற்றை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே குறித்த பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கான தகுதியைக் கொண்டவராவார். தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கு சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

07. **ஆட்சேர்ப்பு முறை**.- இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் சார்ந்த சேவைகள் உத்தியோகத்தருக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு தொடர்பான நடைமுறைகளுக்கும் அரசாங்கத்தினால் வெளியிடப்படும் சுற்று நிரூபங்களுக்கும் இணங்க அனைத்த நியமனங்களும் மேற்கொள்ளப்படும்.

ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக்குறைந்தது 40 புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளில் அவர்கள் பெறும் புள்ளிகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையில் நிலவும் வெற்றிட எண்ணிக்கையின் இரண்டு மடங்கு விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பொருட்டு அழைக்கப்படுவர்.

08. **பரீட்சை முறை :**

இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டுள்ளது.

| *விடயம்* | *காலம்* | *உச்ச புள்ளி* | *சித்தியடைவதற்கான புள்ளி* |
|---|---|---|---|
| 1. பொது உளச்சார்பு | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. ஆங்கிலம் | 02 மணித்தியாலம் | 100 | 40 |

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடைபெறுவதுடன் பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் மொழியில் தோற்ற முடியும். எல்லா பரீட்சார்த்திகளும் இரண்டு வினாப்பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டும்.

(ii) ஒரு பரீட்சார்த்தி தான் விண்ணப்பத்தில் குறிப்பிட்ட மொழி மூலத்தை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(iii) பாடத்திட்டம் :
பாட இலக்கம் 01 - பொது உளச்சார்பு :
எண்கணித ரீதியான, மொழி ரீதியான மற்றும் படங்களைக் கொண்ட கட்டமைப்புக்கள் என்பவற்றினூடாக முன்வைக்கப்படும் பிரச்சினைகளுக்கு பரீட்சார்த்தியின் பிரதிபலிப்பு மற்றும் தீர்மானம் என்பவற்றை மதிப்பிடுவதன் மூலம் அவரின் கிரகித்தல் மற்றும் நுண்ணறிவை அளவிடுவதனை நோக்காகக் கொண்டது. இவ்வினாப்பத்திரம் 50 பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும்.

**பாட இலக்கம் 02 - ஆங்கிலம் :**

(i) கிரகித்தல்.- 200 சொற்களுக்கு குறையாத தெரிவு செய்யப்பட்ட ஒரு பந்தியினை வாசித்து, விளங்கி பதிலளிக்கும் ஆற்றலினைக் கொண்டிருத்தல்.

(ii) இலக்கணம்.- காலங்கள், வினைச் சொங்கள், நேர் கூற்று மற்றும் அயற்கூற்று செய்வினை செயப்பாட்டு வினை, பாலினம் தொடர்பான பொதுவான தெளிவினை பரீச்சிக்கப்படும்.

09.**கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை**.-எழுத்துமூலப்பரீட்சையில்அதிகூடியபுள்ளிகளைப்பெறும்பரீட்சார்த்திகளில் அவர்கள் பெறும் புள்ளிகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையில் நிலவும் வெற்றிட எண்ணிக்கையின் இரண்டு மடங்கு விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பொருட்டு அழைக்கப்படுவர். ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக்குறைந்தது 40 புள்ளிகளைப் பெறத் தவறும் பரீட்சார்த்திகள் எவரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்கள். புலமைச் சொத்து அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட சபையினால் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

**கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**

| *புள்ளி வழங்கப்படும் தலைப்பு* | | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *தெரிவு செய்வதற்காக கருத்திலெடுக்கும் ஆகக்குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|---|
| **மேலதிக கல்வித் தகைமைகள்** | | 25 | பொருத்தமற்றது |
| கலாநிதி பட்டம் (புலமைச் சொத்து/ விஞ்ஞான பாடங்கள்/ விஞ்ஞான துறை) | 25 | | |
| முதுகலைப் பட்டம் (புலமைச் சொத்து/விஞ்ஞான பாடங்கள்/விஞ்ஞான துறை) | 20 | | |
| பட்டப்பின் டிப்ளோமா (புலமைச் சொத்து/ விஞ்ஞான பாடங்கள்/ விஞ்ஞான துறை) | 15 | | |
| மேலதிக முதுகலைப் பட்டம்/ பட்டப்பின் டிப்ளோமா அல்லது ஏனைய அதை ஒத்த தகைமைகள்/உலக புலமைச் சொத்து அமைப்பினது (WIPO) தொலை தூர கற்கைகள் | 10 | | |

| *புள்ளி வழங்கப்படும் தலைப்பு* | | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *தெரிவு செய்வதற்காக கருத்திலெடுக்கும் ஆகக்குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|---|
| **மேலதிக தொழில்வாண்மை தகைமைகள்** | | 35 | பொருத்தமற்றது |
| அரச அல்லது தனியார் துறையில் புலமைச் சொத்து/விஞ்ஞானம்/தகவல் தொழில்நுட்ப துறையில் பணியாற்றிய அனுபவம் | ஒவ்வொரு வருடத்திற்கும் தலா 5 புள்ளிகள் | | |
| ஆங்கில மொழி | | 15 | |
| ஆங்கில மொழி மூலம் பட்டப்படிப்பை பூர்த்திசெய்திருத்தல் | 15 | | |
| க. பொ. த. (சா/ த) பரீட்சையில் ஆங்கில மொழியில் அதி விசேட சித்தி (A) அல்லது விசேட சித்தி (D) (பழைய பாடத்திட்டம்), அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட ஒரு வருட கால அளவு கொண்ட ஆங்கில மொழி டிப்ளோமா | 10 | | |
| க.பொ.த.(சா/த)பரீட்சையில் ஆங்கில மொழியில் விசேட சித்தி (B) அல்லது திறமைச் சித்தி (C) (பழைய பாடத்திட்டம்), அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட ஆறு மாத கால அளவு கொண்ட ஆங்கில மொழி டிப்ளோமா | 05 | | |
| தகவல் தொழில்நுட்ப அறிவு | | 10 | |
| அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட ஒரு வருட கால அளவு கொண்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கற்கைநெறி | 10 | | |
| அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட ஆறு மாத கால அளவு கொண்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கற்கைநெறி | 05 | | |
| நேர்முக பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமை தரப்படும் தொழில்நுட்பம்சார் பிரச்சினை அல்லது பிரச்சினைகள் தொடர்பான புரிதல் | | 15 | |
| **மொத்தம்** | | 100 | |

**ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- எழுத்து மூலப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என்பவற்றில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களுள் நிலவும் வெற்றிடங்களுக்கு ஏற்ப திறமை வரிசை பிரகாரம் மேலே 3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கேற்ப விண்ணப்பதாரர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்படும். ஒரு பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவதென்பது அவர் குறித்த பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது குறித்த பதவிக்கு தேவையான தகுதிகளைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படமாட்டாது. பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு விண்ணப்பதாரர் ஆளாக நேரிடும்.

10. **பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஒழுங்கு**.-

(i) விண்ணப்பப்படிவம் A4, 22×29cm அளவு தாளில் தயாரிக்கப்பட வேண்டியதுடன், 1 முதல் 5 வரையான தலைப்புக்கள் முதல் பக்கத்திலும், எஞ்சியவை ஏனைய பக்கங்களிலும் அமையுமாறு தயாரிக்கப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் சரியாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். குறித்த விண்ணப்பத்தின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலில் வழங்கப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவானதா என்பது பற்றி விண்ணப்பதாரி கவனம் செலுத்த வேண்டியதுடன், அவ்வாறு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) "ஆக்கவுரிமை பரிசோதகர் - தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை" எனும் பரீட்சையின் பெயர் தமிழ்/சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் குறிப்பிடப்பட வேண்டும்.

(iii) பரீட்சைக் கட்டணம் ரூபா 1,200 ஆகும். இத்தொகை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 20-03-02-13 ஆம் இலக்க வருமானத் தலைப்பின் கீழ் அரசாங்க வருமானத்திற்கு வைப்புச் செய்யப்படும் விதத்தில் நாட்டிலுள்ள ஏதேனும் தபால் /உப தபால் நிலையத்தில் மாத்திரம் செலுத்தப்பட வேண்டும். விண்ணப்பதாரர்களின் பெயரில் பெறப்படும் பற்றுச்சீட்டை அதன் ஒரு விளிம்பை விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். பிற்காலப் பயன்பாட்டுக்காக பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

(iv) எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதுடன், காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(v) ஏற்கனவே அரசாங்க திணைக்களங்களில் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தாங்கள் பணிபுரியும் திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பப்படும் விண்ணப்பங்களாக இருந்தாலும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் அனுப்பப்படின் நிராகரிக்கப்படும்.

(vi) விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :
விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துவது கட்டாயமாகும். அரசாங்க சேவை /மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் நிறுவனத் தலைவர் மூலம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்த வேண்டும். உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ பதவி முத்திரை பயன்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவ்வாறில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. **பரீட்சை அனுமதி அட்டை**:-

(i) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டோர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற அனுமானத்தின் அடிப்படையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்திற்கு அல்லது அதற்கு முன் குறிப்பிட்ட பரிட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தை முன்னிலைப்படுத்திய விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது குறித்த அறிவித்தல் பத்திரிகைகளில் அல்லது பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களில் அனுமதிப்பத்திரம் கிடைக்காத பட்சத்தில் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். கொழும்பிற்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரியாயின் அவ்விபரங்களுடன் அனுமதிப்பத்திரத்தின் பிரதியை அனுப்புவதற்கு தொலைநகல் இலக்கத்துடன் கோரிக்கைக் கடிதத்தை தொலைநகல் மூலம் அனுப்பி இது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் பயன்மிக்கதாக அமையும். பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும் வேளையில் தேவையாயின் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தி அந்தஸ்தினை உறுதிப்படுத்துவதற்காக தாம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்துடன் போட்டோப் பிரதி, பரீட்சைக் கட்டணம் கொடுப்பனவிற்கு உரியதாயின் அதற்கான பற்றுச்சீட்டுப் பிரதியும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சிட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

(ii) விண்ணப்பத்திலும் பரீட்சை அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். மேலும் பரீட்சைக்காக தோற்றும் முதல் தினத்தன்றே மண்டப அதிகாரிக்கு தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை சமர்ப்பிக்க வேண்டும்.

(iii) விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப் பெற்றமை தொடர்பாக விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படமாட்டாது.

12. **பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் மண்டப அதிகாரி திருப்தியடையும் வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக கீழ்க்காணும் ஏதேனும் ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;

(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன் பரீட்சார்த்திகள் அவர்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் முகம் மற்றும் காதுகளை மூடுவதை தவிர்த்து பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். மேலும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தில் உள்நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தில் உள் நுழைந்த பின்னர் பரீட்சை முடிந்து வெளியில் செல்லும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரரை அடையாளம் காண்பதற்கு ஏதுவாக முகம் மற்றும் காதுகளை மூடாமல் இருக்க வேண்டும்.

13. **பொய்யான தகவல்களை வழங்குதல்.**- இப்பரீட்சையின் ஒழுங்குவிதிகளுக்கிணங்க விண்ணப்பதாரி தகைமை அற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்துக்குள் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி அந்தஸ்த்தை இரத்துச்செய்ய இடமுண்டு. விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விடயம் உண்மைக்குப் புறம்பானது எனத் தெரியவரும் பட்சத்தில் அல்லது ஏதேனும் ஒரு விடயத்தை வேண்டுமென்றே மறைத்திருப்பின் தொடர்புடைய நடபடிமுறைக்கிணங்க உடனடியாக அவரை அரச சேவையிலிருந்து நீக்க இடமுண்டு.

14. மேற்படி பிரமாணங்களில் மேவப்படாத விடயங்கள் சம்பந்தமாக எழும் பிரச்சினைகள் தொடர்பில் புலமைச் சொத்து அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் முடிவே இறுதி முடிவாகும்.

15. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின் அவ்வேளை சிங்கள மொழி வாசகம் மேலோங்கி நிற்கும்.

கீதாஞ்சலி ஆர். ரணவக்க,
புலமைச் சொத்துக்கள் பணிப்பாளர் நாயகம்,
இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகத்தின் சேவை சார் உத்தியோகத்தர் தரம்- III இன் ஆக்கவுரிமை பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2023**

**Competitive Examination of Recruitment for the Post of Patent Examiner in Grade III of Associated Services at National Intellectual Property Office of Sri Lanka -2023**

அலுவலக பயன்பாட்டிற்கு மட்டும்

| பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் | |
|---|---|

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(குறித்த இலக்கத்தினை பெட்டிக்குள் இடுக)

01. பெயர் :
1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) (உ-ம் : SILVA B. A.) :......................................................................................
1.2 முழுப்பெயர் (தமிழில்) :......................................................................................

02. முகவரி :
தனிப்பட்ட முகவரி :......................................................................................
அலுவலக முகவரி :......................................................................................
(அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்பட வேண்டியது) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
......................................................................................
......................................................................................

03. 3.1 பால் (உரிய இலக்கத்தை கட்டத்தில் இடுக)

| | | |
|---|---|---|
| பெண் | | ஆண் - 0 |
| ஆண் | | பெண் - 1 |

3.2 பிறந்த திகதி :

ஆண்டு: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

3.3 விண்ணப்ப முடிவுத் திகதியில் வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.4 விவாக நிலை (உரிய இலக்கத்தை கட்டத்தில் இடுக)

| | | |
|---|---|---|
| திருமணமானவர் | ☐ | திருமணமானவர் -1 |
| திருமணமாகாதவர் | ☐ | திருமணமாகாதவர்-2 |

04. தேசிய அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

05. தொலைபேசி இலக்கம் :
கையடக்க தொலைபேசி : ☐☐☐☐☐☐☐☐☐☐ நிலையான தொலைபேசி : ☐☐☐☐☐☐☐☐☐☐

06. கல்வித் தகைமைகள் :

6.1 பட்டம் பற்றிய விபரம் :

| பட்டம் | நிறுவனம் | வகுப்பு | பாடங்கள் | செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |

6.2 க. பொ. த. உயர்தரப் பரீட்சை : ஆண்டு : .......................... மாதம் :...............................
சுட்டிலக்கம் :.............................

| பாடங்கள் | பெறப்பட்ட சித்திகள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

6.3 க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை : ஆண்டு : .......................... மாதம் :...............................
சுட்டிலக்கம் :.............................

| பாடங்கள் | பெறப்பட்ட சித்திகள் | பாடங்கள் | பெறப்பட்ட சித்திகள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

07. தற்போது வகிக்கும் பதவி மற்றும் முன்னர் வகித்த பதவி :

| பதவி | நிறுவனம் | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| | | | |

08. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் அலுவலகம் :
செலுத்திய தொகை :
செலுத்திய திகதி :
பற்றுச்சீட்டின் இலக்கம் :

| |
|---|
| பற்றுச்சீட்டைக் கழறாதவாறு இங்கே ஒட்டவும். |

09. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் இணங்க சரியானதும் உண்மையானதும் என வெளிப்படுத்துகிறேன். என்னால் வெளிப்படுத்தப்பட்ட இக்கூற்று பொய்யானது என்று நிரூபிக்கப்பட்டால் நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் தகுதியற்றவராவேன் என்றும் நியமனம் கிடைத்ததன் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்பட முடியும் என்றும் நான் அறிவேன்.

பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுவேன் என்றும் வெளிப்படுத்துகிறேன்.

.....................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :............................

10. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை சான்றுப்படுத்துதல்** :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ...................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் அதற்கான பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

.........................................
சான்றுப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை.

பெயர் :............................
பதவி :............................
முகவரி :............................
திகதி :............................

* விண்ணப்பங்களைக் கோருவதற்கான அறிவித்தலின் 10 ஆவது பிரிவின் VI ஆவது உப பிரிவில் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு இணங்க விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்துதல் வேண்டும்.

* தொடர்புடைய திணைக்களத்தின் அல்லது நிறுவனத்தின் தலைவர் ஊடாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றுப்படுத்தலுடன் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்** :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ...................................................... எனும் பெயருடைய விண்ணப்பதாரி இவ் அலுவலகத்தில் வேலை செய்கின்றார் என்றும், குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தையும் இவ் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுடன் நான் தனிப்பட்ட ரீதியாகப் பரீட்சித்துப் பார்த்தேன் என்றும், அவை சரியானவை என்றும் அவர் இப்பதவிக்காக தெரிவுசெய்யப்படின் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

.........................................
திணைக்களத் தலைவரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரையைப் பதித்தல் வேண்டும்.)

பெயர் :............................
முகவரி :............................
திகதி :............................

08-868

## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2023

01. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை இலங்கை அபிவிருத்தி நிருவாக நிருவகத்தினால் 2023 ஆம் ஆண்டில் கொழும்பில் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02.(i) பரீட்சையை நடாத்துதல் மற்றும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிருவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். பரீட்சையை நடாத்துதல் மற்றும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

(ii) பரீட்சார்த்திகள் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில், இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு உட்படுவதற்கு பரீட்சார்த்திகளுக்கு நேரிடும்.

03. **பரீட்சைக் கட்டணம்:** இப்பரீட்சைக்குரிய பாடங்களுக்கு ஒரே தடவையில் அல்லது தனித்தனியாகத் தோற்ற முடியும். எல்லாப் பாடங்களுக்கும் அல்லது ஒரு பாடத்திற்கு முதல் தடவையாகத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து கட்டணம் அறவிடப்பட மாட்டாது. அதனைத் தொடர்ந்து பரீட்சைக்குத் தோற்றும் போது ஒரு பாடத்திற்கு ஐநூறு (ரூபா 500.00) பரீட்சைக் கட்டணமும், முழுப் பரீட்சைக்குமாக ரூபா ஆயிரத்து ஐந்நூறு (ரூபா 1,500.00) பரீட்சைக் கட்டணமும் அறவிடப்படும். இப் பரீட்சைக் கட்டணங்களை, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் இலங்கை வங்கி பத்தரமுல்லை கிளையின் கணக்கிலக்கம் 7039793 க்கு இலங்கையிலுள்ள எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் வைப்புச்செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூண்டில் ஒட்டுதல் வேண்டும். (பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சிட்டின் நிழற் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.) எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது பிறிதொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது.

04. **விண்ணப்பிக்கும் முறை.-** இந்த அறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக, (A4) அளவிலான கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி இல. 01 தொடக்கம் 06 வரை முதலாம் பக்கத்திலும், எஞ்சிய பகுதிகள் இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு தமது விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும் போது, அதன் தலைப்பை, சிங்கள மொழிமூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழிமூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுவது அவசியமாகும். விண்ணப்பப்படிவங்களை கணினியில்/ தட்டச்சு இயந்திரத்தில் தட்டச்சு செய்து தயாரித்துக் கொள்ள முடியுமெனினும், விண்ணப்பப் படிவம் பரீட்சார்த்தியின் கையெழுத்தினால் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2023.09.12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, "குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், "சுஹுருபாய" பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது நிர்வாகப் பிரிவில் விடயத்திற்குப் பொறுப்பான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரிடம் ஒப்படைத்து கடிதம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படுகின்ற கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். சரியாகப் பூர்த்தி செய்யப்படாத மற்றும் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அத்துடன் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் பூரணமற்ற விதத்தில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும் எந்தவொரு அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக உள்ளதா? என்பதை பரீட்சித்துப் பார்ப்பது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். (பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.)

05. **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்.-** பரீட்சார்த்தியானவர் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்து பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்துடன், பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை நிரூபிக்கக் கூடியவாறு தமது முகத்தையும் காதுகளையும் மூடாது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். இவ்வாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

06. இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற ஊகத்தின் அடிப்படையில், எல்லா விதத்திலும் பரிபூரணமான விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சை நேர அட்டவணை சகிதம் பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் 011 2101553 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து அது தொடர்பில் கட்டுப்பாட்டாளர் (நிர்வாகம்) அவர்களிடம் அறிவித்தல் வேண்டும். இவ்வாறு அறிவிக்கும் போது, விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகிய விபரங்களை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன், தொலைபேசி ஊடாக தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரி ஏற்கனவே தம்வசம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி, விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டு ஆகிய ஆவணங்களைத் தயார் நிலையில் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பிடத்தைக் கொண்டவராக இருப்பின், தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு வசதியாக, மேற்கூறிய விபரங்களுடன் தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு, தமது கோரிக்கைக் கடிதத்தை தொலைநகல் (0115980257) இலக்கத்தினூடாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்திற்கு அனுப்புவதன் மூலம் விசாரிப்பது சாலச் சிறந்ததாக அமையும்.

07. விண்ணப்பப்படிவத்திலும் அதே போன்று பரீட்சை அனுமதி அட்டையிலும் இடப்படுகின்ற பரீட்சார்த்தியின் கையொப்பம், திணைக்களத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுத்தல் வேண்டும். பரீட்சார்த்திகள், தமக்கு விதிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் குறித்த சுட்டெண்ணின் கீழ் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தமது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையை, குறித்த பரீட்சை நாளில் குறித்த பரீட்சை மண்டபத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

08. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரி வகித்த பதவி, சேவை நிலையம் முதலான விபரங்கள் பரீட்சையுடன் தொடர்புடைய எல்லா நடவடிக்கைகளுக்கும் பொருந்தும் என்பதுடன், இவற்றில் பின்னர் ஏற்படக் கூடிய மாற்றங்கள் தொடர்பில் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

09. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையை வைத்திருக்கும் பரீட்சார்த்திகளுக்கு, பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதியாக, திணைக்களத் தலைவரினால் கடமை நிமித்தமான விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும். இங்கு பிரயாணச் செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

10. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்தியொருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான மொழியாக, போட்டிப் பரீட்சை மூலம் அரசாங்க சேவையில் இணைந்த உத்தியோகத்தரொருவராக இருப்பின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலத்தையும், போட்டிப் பரீட்சையின்றி அரசாங்க சேவையில் இணைந்த உத்தியோகத்தரொருவராக இருப்பின், அரசாங்க சேவையில் இணைவதற்கு தகைமை பெற்ற பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலத்தையும் தேர்ந்தெடுத்தல் வேண்டும். பரீட்சைக்குரிய எல்லாப் பாடங்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் தோற்றுதல் வேண்டும் என்பதுடன், தாம் விண்ணப்பிக்கும் போது குறிப்பிட்ட பரீட்சை மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்படமாட்டாது.

11. **பரீட்சை நடைமுறை.-**

1. பரீட்சையின் பெயர்: குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான 1 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை.

2. பரீட்சை தொடர்பான விபரம்:

| வினாத்தாள் | | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியெய்துவதற்காகப் பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 ஆவது வினாத் தாள் | குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் நியதிச் சட்ட ஏற்பாடுகள் I | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| 02 ஆவது வினாத் தாள் | குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் நியதிச் சட்ட ஏற்பாடுகள் II | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| 03 ஆவது வினாத் தாள் | தாபன விதிக் கோவையும் நிதிப் பிரமாணங்களும் | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |

3. பரீட்சையை நடாத்தும் அதிகாரி: இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகத்தின் பணிப்பாளர் நாயகம்.

4. பரீட்சை நடாத்தப்படுகின்ற கால எல்லை : குறைந்தபட்சம் வருடத்திற்கு இரு தடவைகள்.

5. பரீட்சைக்கான பாடத்திட்டம்:

| வினாத் தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| 01 ஆவது வினாத்தாள் - குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் நியதிச் சட்ட ஏற்பாடுகள் I | 1. 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டமும் அதற்கான திருத்தங்களும்.<br>2. 1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க குடியுரிமைச் சட்டமும் அதற்கான திருத்தங்களும்.<br>3. 2008 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சீன வம்சாவளி ஆட்களுக்கு குடியுரிமை வழங்குவதற்கான (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம்.<br>இந்தச் சட்டங்களின் கீழ் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள். |
| 02 ஆவது வினாத்தாள் - குடிவருவோர், குடியகல்வோர் நியதிச் சட்ட ஏற்பாடுகள் II | 1. 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்வதற்கான சட்டமும் அதற்கான திருத்தங்களும்.<br>2. 1977 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க ஒப்படைப்புச் சட்டமும் (Extradition Law) அதற்கான திருத்தங்களும்.<br>3. பிற்காலத்தில் இச் சட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களும் இச் சட்டங்களின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளும்.<br>4. குற்றவியல் சட்டக் கோவையின் தொகுதி V இன் கீழான XI, XII, XIII, XIV, XV அத்தியாயங்கள். |

| வினாத் தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| 03 ஆவது வினாத்தாள் -<br>தாபன விதிக் கோவையும் நிதிப் பிரமாணங்களும் | 1. தாபன விதிக் கோவையின் II, IV, VII, XII, XIII, XIV, XLVII, XLVIII அத்தியாயங்கள்<br>2. 2022.12.14 ஆந் திகதிய 2310/ 29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்<br>3. நிதிப் பிரமாணங்கள் 2(1), 135, 136, 137, 138, 139 மற்றும் நிதிப் பிரமாணங்களின் IV, VI ஆம் அத்தியாயங்கள் |

**குறிப்பு**

* மேலுள்ள பாடங்கள் அனைத்துக்கும் அல்லது தனித்தனியாகத் தோற்றவும் முடியும்.
* உரிய காலப்பகுதியில் பரீட்சையில் சித்தியடைவதற்குத் தவறுவதானது சம்பள ஏற்றம் பின்போடப்படுவதற்குக் காரணமாக அமையலாம்.

12. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டையொன்று விநியோகிக்கப்படுவது பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு, தேவையான எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதப்படமாட்டாது.

13. இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஏற்பாடுகள் செய்யப்படாத எந்தவொரு விடயம் தொடர்பிலும் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

14. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான வர்த்தமானி அறிவித்தல்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் அல்லது பொருந்தாத சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான அறிவித்தல் மேலோங்கி நிற்கும்.

ஐ. எஸ். எச். ஜே. இலுக்பிடிய,
குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம்,
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,
“சுஹுருபாயா”,
பத்தரமுல்லை,
2023, ஓகத்து 08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தரம் II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2023**

**First Efficiency Bar Examination for Authorized Officers Grade II of the Department of Immigration and Emigration – 2023**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் 2
தமிழ் 3
ஆங்கிலம் 4

(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக)

01. 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துகளில்): ..........

(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)

1.2 முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ..........

(உதாரணம்: GUNAWARDANA H.M.S.K.)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்): ..........

02. 2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துகளில்) : ..........

..........

(பரீட்சை அனுமதி அட்டை இந்த முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கப்படும்).

2.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்): ..........

..........

2.3 பிரத்தியேக/தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/தமிழில்): ..........

..........

03. பாலினம் (கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதுக) :

ஆண் - 0
பெண் - 1

04. தேசிய ஆள் அடையாள அட்டை இல.:

05. தொலைபேசி இல.:

06. நீங்கள் இம்முறை தோற்றும் பாடம்/பாடங்கள்:

| தொடர் இல. | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

07. பிறந்த திகதி: வருடங்கள் : ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

08. நீங்கள் தற்போது வகிக்கும் பதவி தொடர்பான விபரங்கள் :

8.1 பதவி: .................................................................

8.2 நியமனக் கடிதத்தின் இலக்கம்: ....................................................

09. 9.1 நீங்கள் பரீட்சைக்குத் தோற்றுவது முதற் தடவையாகவா ?: .........................................................

9.2 முதல் தடவையல்லாத பட்சத்தில் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம்: .........................................

9.3 பற்றுச்சீட்டு இல.: ....................................................

9.4 திகதி: .....................................................

| |
|---|
| பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும். (ஏற்புடையதாயின் மட்டும்)<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்) |

10. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இங்கு என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதெனவும் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதிபெற்றுள்ளேன் எனவும் பரீட்சைக் கட்டணமாகிய ரூபா ................. செலுத்தி அதன் பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் உறுதியுரைக்கின்றேன். மேலும், பரீட்சையை நடாத்துவது தொடர்பிலும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பிலும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட விதிகளுக்கு இணங்கியொழுகுவேன் என்பதையும் உறுதியுரைக்கின்றேன்.

.....................................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :...........

தனது திணைக்களத் தலைவரின் அல்லது திணைக்களத் தலைவருக்காக கையொப்பம் இடுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவர் முன்னிலையில் விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை இடுதல் வேண்டும்.

11. கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்:

எனது திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரொருவர் என்ற வகையிலும் தனிப்பட்ட ரீதியில் எனக்குத் தெரிந்த திரு./திருமதி/செல்வி ............................................................................................ (முழுப் பெயர்) அவர்கள் ........... ....................... ஆந் திகதி எனது முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்பதையும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

...........................................
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துபவரின்
கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் :............................................
பதவிப்பெயர் :..............................................
முகவரி :..........................................
திகதி :................................................
(உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரை)

12. திணைக்களத் தலைவரின் அத்தாட்சிப்படுத்தல் :

1. இங்கு விண்ணப்பதாரியினால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் என்னால் பரீசிக்கப்பட்டது என்பதையும்.
2. இந்த உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குப் பொருத்தமானவர் என்பதையும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

..................................................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரை)

08-988

---

**விசேட அறிவித்தல்**

**ஹோமியோபதி பயிற்சியாளர்களின் பதிவுக்கான இரண்டாவது தேர்வு - 2023**

2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் பிரிவு 30 (3) இன் கீழ் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஹோமியோபதி சட்டம் பிரிவு 30 (1) இன் கீழ் ஹோமியோபதி மருத்துவராக பதிவு செய்ய விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு 2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டம் பிரிவு 30 (2) இன் கீழ் நடைபெறும் இரண்டாவது எழுத்துத் தேர்வு 2023, ஓகத்து 21 ஆந் திகதி முதல் 23 ஆந் திகதி வரை நடைபெறுகிறது. ஸ்ரீ தம்மாராமய, இல. 144, ஹைலெவல் வீதி, நுகேகொடையில் காலை 9.00 மணி முதல் மதியம் 3.00 மணி வரை நடைபெறும் என அறியத்தருகின்றோம்.

பதிவாளர் (பதில்),
ஹோமியோபதி மருத்துவ சபை.

ஹோமியோபதி மருத்துவ சபை,
இலக்கம் 94, ஷெல்டன் ஜயசிங்க மாவத்தை,
வெலிசர,
ராகம.

08-1031

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.